4. கவன ஈர்ப்பு.

அ. கோதையார் இரண்டாவது மின் உற்பத்தி நிலையம் செயலிழந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் டி. மணி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், எம். சின்னசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மின் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, ''குமரி மாவட்டத்தில் கோதையார் இரண்டாவது மின் உற்பத்தி நிலையம் செயலிழந்து உள்ளது குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கோதையாறு மின்நிலையம் 2-ல் 40 மெகாவாட் மின் திறன் கொண்ட மின் இயக்கி 5-3-1982 வரை அதனுடைய முழுத் திறனான 40 மெகா வாட்டை உற்பத்தி செய்து வந்தது. 5-3-1982 அன்று மாலை மின் இயக்கியின் முக்கிய பகுதியான மெயின் எக்ஸைட்டரில் திடீரென பழுது ஏற்பட்டதன் காரணமாக அந்த இயந்திரம் நிறுத்தி வைக்கப்பட்டது. இயந்திரத்தின் பழுதடைந்த பகுதியைச் செப்பனிடும் பணி நடைபெற்று இப்பணி முடிவுற்று நேற்று இரவிலே இருந்து இயந்திரம் செயல்படத் துவங்கியுள்ளது.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, கோதையாறிலே இரண்டாம் பவர்ஹவுசில் அந்த 40 மெகாவாட் உற்பத்தி செய்யக் கூடிய நிலையத்தில், முக்கியமான இயந்திரக் கோளாறு என்று சொல்கிற எக்ஸைட்டர் சுமார் 1 மாத காலம் வேலை செய்யவில்லை.

ஏற்கனவே அந்த எக்ஸைட்டருக்கு ஒரு ஸ்பேர் வாங்க வேண்டுமென்று அங்கே உள்ள ஊழியர்கள் ஓராண்டுக்கு முன்பே அதிகாரிகளிடத்திலே கூறியுள்ளார்கள். அந்த எக்ஸைட்டர் வெளிநாட்டிலேயிருந்து வரவழைக்கப்பட்டு செயல்பட்டு வந்தது. தற்காலிகமாக அது பழுது பார்க்கப்பட்டாலும் அது மூன்று மாதங்களுக்கு மேல் ஓட்டுவதற்கு லாயக்கானதாக இல்லை என்று அங்கேயுள்ள முக்கியமான ஊழியர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். மின்சாரம் ஏற்கனவே நமக்குப் பற்றாக்குறையாக உள்ள இந்த நேரத்தில் உடனடியாகப் பழுது பார்ப்பதோடு கூட இன்னும் ஸ்பேராக அந்தப் பொருளை வைத்திருந்தால் இந்தப் பகுதியை ஓட்டிச் செல்ல முடியும் என்று சொல்கிறார்கள். அதை அரசு நடைமுறைப்படுத்துமா ? அதற்குச் சுற்றிலும் உள்ள கார்பன் பிரஷ் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தேய்ந்து போய் விடுகிறது. அதையும் முறையாகப் பழுது பார்த்து மின்சாரம் இடர்ப்பாடு இல்லாமல் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முன் வருவார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுக்குள் ஏதாவது பேச வேண்டுமென்றால் அதற்கு இரண்டு மூன்று லவுஞ்சுகள் இருக்கின்றன. அங்கே போய் பேசலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, எக்ஸைட்டரை பொறுத்தவரையில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. அதற்கு ஸ்பேர் வாங்கி வைக்க வேண்டுமென்ற யோசனை ஏற்றுக் கொள்ளத்தக்கது. ஏற்கனவே ஊழியர்கள் இதுகுறித்துக் கடிதம் கொடுத்தும் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் கடிதத்தின் நகலை எனக்குக் கொடுத்தால் நடவடிக்கை எடுக்காதவர்கள்மீது நான் நடவடிக்கையெடுப்பேன் என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். கார்பன் பிரஷைப் பொறுத்தவரையிலும் கவனிக்கப்படும்.

* திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த மெஷினுடைய முக்கியமான பாகங்கள் செக்கோஸ்லோவேகியா நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இந்த மெஷினைப் பற்றி அரசாங்க அதிகாரிகளின் கவனத்திற்கு ஆறு, ஏழு மாதங்களுக்கு முன்பே கொண்டுவரப்பட்டிருக்கிறது. காலாகாலத்தில் வாங்கி வைப்பதன் மூலம் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படாமல் தடுக்க முடியும் என்று அரசாங்கத்திற்கு மேலதிகாரிகளுக்கு அங்குள்ளவர்கள் எழுதி கொடுத்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் காலாகாலத்தில் இதை செய்யாமல் இருப்பதற்கான காரணம் என்ன என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். அதன் காரணமாகப் பக்கத்தில் உள்ள கயத்தாறுக்குச் சப்ளை செய்யப்படுகிறது. மின்சாரம் கிட்டத்தட்ட ஒரு மாத காலமாகத் தடைபடுகிறது. ஏற்கனவே மின்சாரத் தட்டுப்பாடு இருக்கின்ற நேரத்தில் இப்பொழுது மேலும் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. மின்தடையை நீக்குவதற்கு அதிகமாக ஆயத்தங்கள் ஒருபுறத்தில் இருந்தாலும் இயங்கிக் கொண்டிருக்கின்ற இயந்திரங்களுக்கு முக்கியமான ஸ்பேர் பார்ட்ஸை முன்னதாகவே வாங்கி வைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களின் உணர்வினை அரசு நன்றாகப் புரிந்துகொள்கிறது. அதற்கேற்ற முறையில் வழிவகைகளை நிச்சயமாக மேற்கொள்ளும்.

1982 மார்ச் 30]

ஆ) பச்சை மிளகாய்ப் பயிர் நோயால் தாக்கப்பட்டுள்ளது

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, "வேடசந்தூர் தொகுதியில் பச்சை மிளகாய்ப் பயிர் உச்சிப்பிளவை நோயால் தாக்கப்பட்டுள்ளது குறித்து" அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மதுரை மாவட்டம் வேடசந்தூர் பகுதியில் மிளகாய் சுமார் 2,500 ஏக்கர் பரப்பில் உள்ளது. தற்போது மிளகாய் பூத்துக் காய்க்கும் பருவத்தில் உள்ளது. ஒரு சில பகுதிகளில் பச்சைக் காய்கள் அறுவடை செய்யப்பட்டுள்ளன. பிளவை நோய் பரவலாக சிறிய பரப்பளவிலேயே காணப்பட்டன. இது அலுவலர்களால் அறியப்பட்டு நோய் பரவா வண்ணம் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது வரை சுமார் 2500 ஏக்கருக்குப் போதுமான நோய் தடுக்கும் மருந்துகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. பயிற்சி வழி தொடர்பு அலுவலகம் தொடர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. நோயினால் சேதமில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மிளகாய் போன்ற நீண்ட காலப்பயிர்களுக்குக் கடுமையான நோய்கள் வரும்போது ஒட்டுமொத்தமாக அந்த ஆண்டு மகசூல் பாதிக்கப்படுகிறது. வேடசந்தூர் பின் தங்கிய பகுதியாக இருப்பதால் பயிர்ப் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டத்தை அங்கே விஸ்தரிக்க வேண்டுமென்று மாநில அரசு பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் கூட்டுறவுத் துறையினால் செயல்படுத்தப்பட்டு வருகின்ற திட்டம். ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்திருக்கின்ற இந்தக் கருத்துக்களின் அடிப்படையில் இந்தத் துறை கூட்டுறவுத் துறையோடு கலந்தாலோசிக்கும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுபோன்ற ஒருசில குறிப்பிட்ட பகுதிகளில் பயிர் மகசூல் பாதிக்கப்படுகிறது என்ற நிலைமை வருகிறபொழுது பாராளுமன்றத்தில் இதற்காக சுமார் 20 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகத் தெரிகிறது. அப்பொழுது மைய அரசால் அமைக்கப்பட்ட குழு அனுப்பப்பட்டு குறுகிய அளவில் பாதிப்பு ஏற்பட்டு நஷ்டம் ஏற்பட்டிருந்தாலும் மத்திய அரசு பரிசீலிக்கும் என்று 9—3—1982 அன்று பாராளுமன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுபிப்ரமணியன்] [1982 மார்ச் 30

(முற்பகல் 10—20)

ஆகவே இந்த அரசும் நோய் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கின்றபோது நம்முடைய மாநில அதிகாரிகள், ஏற்பட்டிருக்கின்ற சேதங்கள் எவ்வளவு, அதனால் விவசாயிகளுக்கு எவ்வளவு பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது என்ற விவரங்களை எடுத்து மத்திய அரசுக்கு அனுப்பி, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பயிர்பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம் அந்த அடிப்படையிலே தான் செய்யப்படுகிறது. ஆனால் அதை இந்தத் துறை நேரடியாகக் கவனிக்காத காரணத்தினால், கூட்டுறவுத் துறையோடு இதுபற்றிக் கலந்து முடிவு செய்யும்.

6. அறிக்கை அளித்தல்.

பொதுக்கணக்குக் குழு

திரு. எஸ். என். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, 1976–77-ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களிலும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாகச் செலவழித்த தொகை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் 11-வது அறிக்கையை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் சட்ட முன் வடிவுகள்

(அ) இந்தியக் கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. எஸ் திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, 1982-ஆம் ஆண்டு இந்தியக் கூட்டண்ாமை (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.